யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | கிறிஸ்தவ நாகரிகம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ **மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலகத்ததை விடைத்தாளில் புள்ளடி (✕) இடுக.**

01) இயேசுக்கிறிஸ்து தாம் வாழ்ந்த காலத்தில் தம்மோடிருக்கத் தெரிந்து கொண்டவர்கள்
1) 3 பேர், 6 பேர், 72 பேர்
2) 12 பேர், 3 பேர், 6 பேர்
3) 3 பேர், 6 பேர், 4 பேர்
4) 4 பேர், 6 பேர், 12 பேர்
5) 3 பேர், 12 பேர், 72 பேர்

02) அப்போஸ்தலர்கள் புத்துயிர் பெற்றது
1) இயேசுவின் உயிர்ப்பின் பின்
2) இறுதி இராவுணவு வேளையில்
3) தூய ஆவியின் வருகையின் பின்
4) பேதுருவின் அருளுரையின் பின்
5) இயேசு புதுமை செய்த வேளையில்

03) சீடர்கள் கிறிஸ்தவர் என்ற பெயரைப் பெற்றனர்,
1) அந்தியோக்கியாவில்
2) சமாரியாவில்
3) கலிலேயாவில்
4) பெத்தானியாவில்
5) சைப்பிரஸ்சில்

04) பவுல் திமொத்தேயுவைத் தன்னடன் அழைத்துச் சென்ற பயணம்
1) மூன்றாம் பயணம்
2) இரண்டாம் பயணம்
3) முதலாம் பயணம்
4) முதலாம் இரண்டாம் பயணங்கள்
5) இரண்டாம் மூன்றாம் பயணங்கள்

05) கி. பி. 107 இல் சிங்கங்களுக்கு இரையாக்கப்பட்டவர்
1) புனித லோறன்சியார்
2) புனித கர்த்தரீனம்மாள்
3) ஆயர் இஞ்ஞாசியார்
4) புனித சிசிலியம்மாள்
5) புனித தார்சியுஸ்

06) "ஹனுக்கா" என்பது
1) புளியாத அப்பப் பண்டிகை
2) கூடாரத் திருவிழா
3) பெந்தக்கோஸ்து விழா
4) ஆலய அர்ப்பணவிழா
5) உயிர்ப்பு விழா

07) மகன் கடவுளல்ல என்றால் தூய ஆவியும் கடவுளல்ல எனக் கூறியவர்
1) ஆரியுஸ்
2) இயுக்திக்கேஸ்
3) மசதோனியுஸ்
4) நெஸ்தோரியுஸ்
5) எயுசேபியுஸ்

08) தன்னை ஆண்டவரெனப் பிரகடனம் செய்து, தன்னை வணங்காதவர்களை துன்புறுத்திய பேரரசன்
1) தொமீசியன்
2) தீசயுஸ்
3) வலேரியன்
4) செப்திமுஸ் செவாருஸ்
5) திராஜன்

09) ‘அனைத்து சமய மக்களின் மறைபோதகர்’ எனப் பிரகடனம் செய்யப்பட்டவர்
   1) புனிதபொனிபஸ்   2) புனித ஆன்ஸ்கா   3) புனித அய்டன்
   4) புனித அகுஸ்தீனார்   5) புனித கொலம்பா

10) பிலிப்பியில் பவுலின் பணித்தளமாக காணப்பட்ட இடம்
   1) செபக்கூடம்   2) லியாதிவின் வீடு   3) ஆற்றங்கரை
   4) சிறைக்கூடம்   5) சிறைக்காவலாளியின் வீடு

11) புனித போருக்காக திருத்தந்தை 2ம் ஆர்பன் மாபெரும் சங்கத்தை கூட்டிய நாடு
   1) இங்கிலாந்து   2) ஜேர்மனி   3) இத்தாலி
   4) அயர்லாந்து   5) பிரான்ஸ்

12) துறவறக்குழு வாழ்வின் தாபகர்
   1) வனத்து அந்தோனியார்   2) பக்கோமியுஸ்   3) பசில்
   4) ஆசிர்வாதப்பர்   5) சின்னப்பர்

13) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A - வல்தேசியன் சபை ஓர் இரவலர் சபை ஆகும்.
   B - குளுணி ஓர் இரவலர் சபை ஆகும்.
   C - டொமினிக்சன் சபை ஓர் இரவலர் சபை ஆகும்.
   D - சிஸ்ரேஷியன் ஓர் இரவலர் சபை ஆகும்.
   1) A யும் B யும்   2) A யும் C யும்   3) B யும் D யும்
   4) C மட்டும்   5) A மட்டும்

14) கப்புச்சியன், கார்மேல், வின்சன்சியன், இயேசு சபை ஆகிய துறவற சபைகளின் விசேட பண்புகள்
   1) இவையனைத்தும் சமகாலத்தில் ஆரம்பிக்கப்பட்டன
   2) இவை 16 அம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டு, திருச்சபையின் புதுப்பித்தலுக்கு பங்களிப்புச் செய்தன.
   3) ஆண், பெண் இருபால் துறவிகளைக் கொண்டிருந்தன.
   4) புதிய ஆன்மீக வழிமுறைகளை திருச்சபைக்கு அறிமுகம் செய்தவர்கள்
   5) நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக தங்களை முழுமையாக அர்ப்பணம் செய்தவர்கள்

15) மாட்டின் லூதரை சீர்திருத்தம் தொடர்பாக சிந்திக்க வைத்தது
   1) உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்
   2) நம்பிக்கையால் மட்டும் ஒருவன் மீட்படைய முடியும்
   3) மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்
   4) கிறிஸ்துவின் வாழ்க்கை எனும் நூல்
   5) யாவும் சரியானவை

16) மாட்டின் லூதர் ஏற்றுக்கொண்ட முக்கிய திருவருட்சாதனங்கள்
   1) பாவமன்னிப்பு, திருமுழுக்கு, திருமணம்
   2) திருமுழுக்கு, நற்கருணை, பாவமன்னிப்பு
   3) நற்கருணை, உறுதிப்பூசுதல், திருமணம்
   4) உறுதிப்பூசுதல், குருத்துவம், ஒப்புரவு
   5) குருத்துவம், திருமணம், ஒப்புரவு

17) ‘ஏழு அருளடையாளங்களின் இயல்புகள்’ என்ற மடலை எழுதியவர்
   1) VII ஆம் கென்றி   2) V ஆம் சாள்ஸ்   3) VIII ஆம் கென்றி
   4) சாள்ஸ் மேன்   5) கல்வின்

The National e-learning Portal for The General Education

18) 1604 குறோய்த் தீவில் முதன்முதலில் திருப்பலியை ஒப்புக் கொடுத்தவர்

1) தூரிபியுஸ் 2) நிக்கொலஸ் 3) சோலானுஸ்

4) கிளேவர் 5) ஐசெக்பேக்ஸ்

19) பிலிப்பைன்ஸ் நாட்டில் அதிக வீதத்தினர் கத்தோலிக்கர்களாக விளங்குவதற்குக் காரணம்

1) பிலிப்பைன்ஸ் திருச்சபை அரசியலில் பங்கு கொண்டமை

2) பல துறவற சபைகளின் பணி இடம்பெற்றமை

3) இஸ்பானிய நாட்டின் சமய கலாசாரத் தாக்கம் இருந்தமை

4) மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுத்தமை

5) ஜனநாயகம், சுதந்திரம் போன்ற கருத்துக்கள் முதன்மை பெற்றமை

20) 'கூணன் சிலுவை ஆணை' என்ற கிளர்ச்சி இடம்பெற்ற காலப் பகுதி

1) 1655 2) 1635 3) 1653

4) 1685 5) 1658

21) கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் கானான் நாட்டைக் கைப்பற்றிய கிரேக்கர் இந்நாடு முழுவதையும் ................................... என்று பெயரிட்டனர். இடைவெளிக்குப் பொருத்தமான சொல்

1) பாலஸ்தீன் 2) அசிரியா 3) எக்ரோன்

4) பாரசீகம் 5) இதுமேயா

22) முதன் முதலாக நாணயங்களைப் பயன்படுத்திய நாகரிகம்

1) யூத நாகரிகம் 2) அசிரிய நாகரிகம்

3) நைல்நதிக்கரை நாகரிகம் 4) மொசப்பத்தேமியா நாகரிகம்

5) மேலைத்தேய நாகரிகம்

23) பெயர்செபா பள்ளத்தாக்குக்கு தெற்கே அமைந்துள்ள பாலை நிலப்பகுதி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

1) பெலிஸ்திய சமவெளி 2) சமாரியா 3) எஸ்திரலோன் புல்வெளி

4) பெத்தானியா 5) நேகேப்

24) A - மீக்கா, ஆமோஸ்

B - எலியா, எலிசேயு

C - எரேமியா, எசேக்கியேல்

D - ஆமோஸ், ஓசேயா

E - எசாயா, தானியேல்

'வட அரசை சிறந்த நெறிவாழ்வுக்கு இட்டுச் சென்றனர்'. இக்கூற்றுக்குப் பொருத்தமற்றதாகக் காணப்படும் இறைவாக்கினர்.

1) A யும் B யும் 2) B யும் D யும் 3) A மட்டும்

4) C யும் E யும் 5) B மட்டும்

25) 'மக்கபேயர்' என்பதன் பொருள்

1) யூத சட்டங்களை நிலை நாட்டுதல்

2) ஆலய வழிபாட்டை முன்நின்று நடாத்துதல்

3) இஸ்ரயேலருக்கு அன்பு காட்டுபவர்

4) அவரது கையினால் இஸ்ராயேலுக்கு மீட்பு உண்டாக்கப் போகிறது

5) அறியாதோருக்கு இறை வார்த்தையை அறிவித்தல்

26) 'திருப்பொழிவு செய்யப்பட்டவர்' என்ற பொருளைத் தரும் கிரேக்கச் சொல்

1) மெசியா 2) கிறிஸ்து 3) மானிடமகன்

4) ஆண்டவர் 5) இறைமகன்

27) ‘நீங்கள் நான் யார் என்று சொல்கிறீர்கள்’ என்ற இயேசுவின் கேள்விக்கு ‘நீர் மெசியா’ என விசுவாச அறிக்கை செய்தவர்

1) பேதுரு 2) தோமா 3) யோவான்
4) யாக்கோபு 5) யூதா

28) திருத்தூதர்களின் படிப்பினைகள் அடங்கிய சிறிய நூல்

1) திருத்தூதர்பணி 2) திருவெளிப்பாடு
3) தூயபர்னபாசின் நற்செய்தி 4) டிடாக்கே
5) சபை உரையாளர்நூல்

29) யூதர்களின் சடங்கு, சட்டம் விதிமுறைகள் அடங்கிய தொகுப்பு

1) கிளமேந்தின் கடிதங்கள் 2) ஹேர்மஸ் ஆயன்
3) சாக்கடல் ஏடுகள் 4) மிஸ்னா
5) இஞ்ஞாசியாரின் திருமுகங்கள்

30) உரோம் - ஒல்லாந்து சட்டங்களை முதலில் இலங்கையில் அறிமுகப்படுத்தியவர்

1) போர்த்துக்கேயர் 2) உரோமர் 3) ஒல்லாந்தர்
4) முஸ்லீம் 5) ஆங்கிலேயர்

31) புனித பவுல் சட்டம் அர்த்தமற்றதாகிவிட்டது எனக் கூறுவதற்கு காரணமாக அமைவது

1) ஆபிரகாம் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவரானதால்
2) இயேசுவே சட்டத்தின் முழுமை என்பதனால்
3) சட்டம் பாவத்திற்கு வழிவகுப்பதனால்
4) சட்டம் நல்லது கெட்டது பற்றி கூறுவதனால்
5) சட்டம் மனிதனை மீட்க முடியாது என்பதனால்

32) பரிசுத்த ஆவியானவரின் கொடைகளுள் அதிசிறந்த கொடையாக காணப்படுவது

1) ஞானம் 2) அறிவு 3) பரவசப் பேச்சு
4) பேயோட்டுதல் 5) அன்பு

33) கிறிஸ்தவ இறையியல் கல்லூரிகளின் தோற்றத்திற்கான உடனடிக் காரணமாவது

1) இறையியலை வளர்க்க
2) திருச்சபையினருக்கு மறைக்கல்வியளிக்க
3) நொஸ்டிக்க பேதகத்தை முறியடிக்க
4) குருக்களுக்காக
5) துறவிகளுக்காக

34) கிரேக்கத்திற்கு பொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டு நூல் ............................ என அழைக்கப்படுகின்றது. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்

1) தார்கும் 2) எழுபதின்மர் நூல் 3) வுல்கத்தா
4) தால்மூட் 5) அப்பொலொஜியா

35) மேற்கத்தேய திருச்சபை வழிபாட்டுத் திரு இசையின் தந்தை என அழைக்கப்படுபவர்

1) பசில் 2) ஒரிஜென் 3) இரனேயுஸ்
4) அம்புரோசியார் 5) யுஸ்தின்

36) ஸ்பானியா நாட்டிலுள்ள பழமையான பல்கலைக்கழகம்

1) பொலஞ்ஞா பல்கலைக்கழகம் 2) பரிஸ் பல்கலைக்கழகம்
3) ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகம் 4) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்
5) சலமன்கா பல்கலைக்கழகம்

37) பின்வரும் விடயங்களைக் கருதுக.

A - விடைக்கான பின்னணியைத் தயார் செய்தல்

B - வினாவை முன்வைத்தல்

C - விடையை முன்வைத்தல்

D - சார்பாகவும் எதிராகவும் காரணங்களை முன்வைப்பது

E - அறிவு பூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிவை வழங்குதல்

மேலுள்ளவற்றில் 'கொலாஸ்டிசித்தில்' (Scholasticism) உள்ளடங்குபவை

1) A, B, C 2) A, D, E 3) B, D, E 4) B, D, E 5) C, D, E

38) புனித அகுஸ்தீனார் இயற்றிய நூல்

1) இறைவனின் நகரம் 2) லவுடா சியோன் 3) கிறிஸ்து வழி வாழ்வு
4) ஆன்மீகக் கீதம் 5) செபவாழ்வு

39) கிறிஸ்தவர்களின் முதல் சித்திரமென அறிமுகப்படுத்தப்பட்டவை ................................ ஆகும்.

1) மலைச்சித்திரங்கள் 2) சுவர்ச்சித்திரங்கள்
3) வழிபாட்டுச் சித்திரங்கள் 4) நிலச்சுரங்கச் சித்திரங்கள்
5) ஐகோன் உருவம்

40) ஆரம்பகால கிறிஸ்தவர்களின் துன்பகரமான வாழ்வை பிரதிபலிக்கும் ஓவியம்

1) டொமிறில்லா கல்லறை 2) கிறிஸ்தவ சுவரோவியங்கள்
3) மொனாலிசா ஓவியம் 4) நடுத்தீர்வை
5) உலகப் படைப்பு

41) A - கோயில்பற்று பாடசாலை

B - செமினறிப் பாடசாலைகள்

C - கல்லூரி முறைமை

D - அரசகர்களுக்கான கல்விக் கூடங்கள்

E - அரசாங்கப் பாடசாலைகள்

இவற்றுள் போர்த்துக்கேயர் காலத்தில் காணப்பட்ட கல்வி முறைகள்

1) A, B, C 2) A, C, D 3) B, D, E 4) C, D, E 5) B, C, D

42) 'பக்தி பிரபோதன' என்ற சஞ்சிகையின் ஆசிரியர்

1) மேதகு சிறில் அபேநாயக்க 2) அருட்பணி பீட்டர் பிள்ளை
3) அருட்பணி S. G. பெரேரா 4) மேதகு எட்மன்ட் பீரிஸ்
5) அருட்பணி W. டொன்பீற்றர்

43) "நேர்மையுள்ள நாடு மென்மை அடையும் - பாவம் நிறைந்த எந்த நாடும் இழிவடையும்" என்ற மகுட வாக்கியத்தையுடைய பத்திரிகை

1) மன்னா 2) பாதுகாவலன் 3) உதயதாரகை
4) பக்தி பிரபோதன 5) சத்திய வேந்தன்

44) வட மத்திய மாகாணத்தில் தலவா பிரதேசத்தை மையமாகக் கொண்டு ஆதவரற்ற, துன்புறும் மக்களுக்கு ஆதரவளிப்பதற்காக தமது வாழ்வை அர்ப்பணித்தவர்

1) அருட்பணி மைக்கல் றொட்ரிகோ
2) மேதகு ஆயர் இலஷ்மன் விக்கிரமசிங்க
3) மேதகு ஆயர் பிராங்க் மாக்கஸ் பர்னாந்து
4) மேதகு ஆயர் லியோ நாணயக்கார
5) இவிளின் காணி அம்மையார்

45) யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளால் இயற்றப்பட்ட இலக்கியங்களில் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஓர் இலக்கியம்

1) கடவுள் நிர்ணயம் 2) அற்புத வரலாறு 3) ஞானப்பள்ளு
4) வியாகுல பிரசங்கம் 5) தர்ம உத்தியானம்

46) பிரமிட் அமைப்பு முறை யாரை மையப்படுத்திய திருச்சபையின் தன்மையை வெளிப் படுத்துகின்றது

1) திருத்தந்தையர் 2) ஆயர்கள் 3) குருக்கள்
4) இறைமக்கள் 5) துறவிகள்

47) ஆசிய ஆயர்கள் பேரவை (FABC) அதிகார பூர்வமாக வத்திக்கானில் திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்கப்பட்டது

1) 1970 இல் 2) 1972 இல் 3) 1975 இல்
4) 1978 இல் 5) 1968 இல்

48) கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான பயணத்தில் பல சவால்கள் எழுகின்றன. அவற்றுள் முக்கியத்துவம் பெறுவது

1) நம்பிக்கை அறிக்கைகள் 2) பெண்களின் பணிக்குருத்துவம்
3) அருளடையாளங்கள் 4) நற்கருணை
5) சடங்குமுறைகள்

49) 2ம் வத்திக்கான் பொதுச்சங்க கோட்பாடுகள், வழித்தொகுப்புக்கள், அறிக்கைகள் என்றவகையில் கொள்கைத் திரட்டுகள் வெளியிடப்பட்டுள்ளது. இவற்றுள் கோட்பாடுகள் என்னும் தொகுப்பில் உள்ளடங்காதது

1) திருவழிபாடு
2) கிறிஸ்தவ கல்வி பற்றிய விளக்கம்
3) திருச்சபை பற்றிய கோட்பாடு
4) இறைவழிபாடு
5) இன்றைய உலகில் திருச்சபை

50) 'கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தை' எனப் பெயர் பெற்றவர்

1) திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் 2) திருத்தந்தை 13ம் சிங்கராயர்
3) திருத்தந்தை 23ம் அருளப்பர் 4) திருத்தந்தை 6ம் சின்னப்பர்
5) திருத்தந்தை 15ம் பெனடிற்